பக்கங்கள் 25

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 23 திங்கட்கிழமை 08.09.2025 | அதிர்வு 38

### நட்புறவு மாநாட்டில் கலந்துகொள்ள

## இலங்கை அரசியல்வாதிகள் சுவிட்சர்லாந்துக்குப் பயணம்

(ந.லோகதயாளன்)

இலங்கை – சுவிட்சர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14 ஆம் திகதி 02



### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க

# சர்வதேச தலையீடு தேவையே இல்லை

### யாழில் ஜே.வி.பியின் செயலர் ரில்வின் சில்வா தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

“நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிப்புற சக்திகளை அழைக்கவேண்டியதேவை இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதற்குச் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை. எங்களுடைய நாட்டுக்குள்ளேயே எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். எனவே, இலங்கையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.” 02

# ஜெனிவா கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

### இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து விவாதம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு (இலங்கை நேரம் மதியம் 1.30 மணி) ஆரம்பமாகின்றது.

இன்று உலகளாவிய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் உரையாற்றுவார். இதன்போது, இலங்கை தொடர்பான எழுத்து மூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

பின்னர், இலங்கை நேரம் பிற்பகல் 3.45 மணிக்கு இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை குறித்து விவாதம் நடைபெறும். இதில், உறுப்பு நாடுகளின் 02




உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்று மக்களினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் கைகளுக்கு நிர்வாகங்கள் வந்தமையால், ஏதோ நல்லது நடக்கும் என மக்கள் நம்பினர். ஆனால் சபைகளில் நடப்பது வேறு விதமாகவே இறுக்கின்றது. அதிகாரிகளுக்குச் சில்லெடுக்கும் தர்பார்தான் பல சபைகளிலும் நடக்கின்றன என்று முறைப்பாடுகளுக்கு மேல் முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன.

சபை நடைமுறை அறியாத உறுப்பினர்கள் ஆர்வக் கோளாறினால், நாடாளுமன்ற ‘கோப்’ குழுவிற்கே இல்லாத அதிகாரத்தைத் தங்க கைகளில் எடுத்து, சபை நடவடிக்கையின்போது அதிகாரிகள் 03

# நிமலராஜன் படுகொலை வழக்கு விசாரணை அறிக்கை வெளியீடு





(எஸ்.நிதர்ஷன்)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட அமைப்பால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இதன்போது நிமலராஜனின் உருவப் படத்துக்குச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு. செல்வகுமாரால் அந்த அறிக்கையின் முதல் பிரதி நிமலராஜனின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன் அறிக்கையின் பிரதிகள் நிகழ்வில் கலந்துகொண்ட ஏனையோருக்கும் வழங்கப்பட்டன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச தலையீடு...

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் காரியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது நூலகத்தை நேற்று திறந்து வைத்தபின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண சபைத் தேர்தல் விரைவில் இடம்பெறும். கடந்த கால ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட மாகாண எல்லை நிர்ணயத் திருத்தச் சட்டம் காரணமாகவே தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றம் ஊடாக அதில் திருத்தங்களை மேற்கொண்டு, மக்களுக்கும் தெளிவுபடுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமான தீவாகும். அதற்கு எவரும் உரிமை கோர முடியாது. எங்களுக்கு இந்தியாவுடன் மிகவும் நெருங்கிய உறவு உள்ளது. கச்சதீவைத் தங்களுக்கு மீண்டும் வழங்குமாறு இந்திய அரசு எந்தவிதமான கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை.

எங்களுக்குத் தேர்தல் காலங்களில் கச்சதீவை மீட்போம் என்ற பிரசாரங்களைப் புரிந்துகொள்ள முடிகின்றது. தமிழகத்தில் தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக கச்சதீவு தொடர்பில் பேசப்படுகின்றது. சட்ட ரீதியாக கச்சதீவை இந்தியா மீளப்பெறுவதற்கான எந்த ஏற்பாடுகளும் இல்லை.

அரசியல் தீர்வு என்பது நீண்ட காலமாக இருக்கும் ஒரு பிரச்சினையாகும். இந்த நாட்டில் நடந்த குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களைத் தேடி நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடங்கியுள்ளோம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீது சட்டத்தை அமுலாக்கியுள்ளோம். பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளையும் இயன்றளவு மேற்கொள்கின்றோம். அதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

குறிப்பாகக் காணாமல்போனவர்கள் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகக் காணாமல்போனவர்களுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தியுள்ளோம்.

எங்களுடைய நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிப்புறச் சக்திகளை அழைக்க வேண்டிய தேவை இல்லை. முன்னைய அரசுகள் இருந்தபோது இங்கு எந்தவித விசாரணையும் இடம்பெறவில்லை என்பது உண்மை. ஏனென்றால் இங்கு இடம்பெற்ற குற்றங்களுடன் கடந்த கால ஆட்சியாளர்கள் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். குற்றத்தைச் செய்தவர்கள் ஒருபோதும் நியாயத்தை வழங்க மாட்டார்கள். ஆனால், தற்போது இருப்பது மக்களுடைய அரசு. எனவே, மக்களுக்கு நியாயத்தை வழங்குவது எமது பொறுப்பாகும்.

நீதியை வழங்குவதற்குச் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை. எங்களுடைய நாட்டுக்குள்ளேயே எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். எனவே, இலங்கையின் சட்டதிட்டங்களின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அது பற்றி எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை,

வங்குரோத்தான எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்குள் பிளவு என நீண்டகாலமாகக் கூறி வருகின்றனர். ஆனால், எதுவும் நடக்கவில்லை. பிரதமர் ஹருணி அமரசூரியவின் எம்.பி. பதவி பறிக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள். தற்போது அவர் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்படப் போவதாகக் கூறுகின்றார்கள். அது அவர்களுடைய கனவுகள். அது ஒருபோதும் பலிக்காது.” – என்றார்.

---

### ஜெனிவா...

பிரதிநிதிகள் தமது நாடுகளின் நிலைப்பாடு தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பர்.

பிரதிநிதிகளின் கருத்துக்களின் பின்னர், இலங்கை அரசின் நிலைப்பாடு – முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் விளக்கமளிப்பார்.

இதேநேரம், இன்று ஆரம்பமாகும் கூட்டத் தொடரில் பிரிட்டன் தலைமையிலான உறுப்பு நாடுகளால் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணை குறித்த உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடல்கள் எதிர்வரும் 15ஆம் திகதியின் பின்னர் நடைபெறும் என்று அறியவருகின்றது.

---

### இலங்கை...

சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள நட்புறவு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையில் புதிய அரசமைப்பு மாற்றம் நிகழவுள்ள நிலையில் இலங்கை அரசியல்வாதிகள் சுவிஸ் அரசமைப்பு பற்றிய ஆழமான நேரடி நுண்ணறிவுகளைப் பெறவும், அர்த்தமுள்ள பரிமாற்றங்களில் ஈடுபடவும் ஒரு வாய்ப்பு இதன்போது வழங்கப்படும் என்று சுவிட்சர்லாந்து தூதரகம் விடுத்துள்ள அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது

இலங்கையைச் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மேலும் சில அரசியல்வாதிகள் இந்த மாநாட்டில் பங்குகொள்ளவுள்ளனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருடன் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரான பேராசிரியர் கபிலனும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதிச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினராக உயர்நீதிமன்ற நீதியரசர் துரைராஜா நியமனம்



உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.துரைராஜா நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி முர்து பெர்னாண்டோ சேவையில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கு ஜனாதிபதியால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்,ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.துரைராஜா 1988ஆம் ஆண்டு சட்டத்தரணியாகப் பதவியேற்றார்.அதனைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு அரச தரப்பு சட்டத்தரணியாக இணைந்து கொண்டார். அதன் பின்னர் மேலதிக சொலிட்டர் ஜெனராலாக பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியால் எஸ்.துரைராஜா ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டு அதே ஆண்டு மேன்முறையீட்டு நீதியரசராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அனைவரையும் நிற்க வைத்து, ஊடகங்கள் முன்பாக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைத்து, நீதிமன்ற விசாரணை போன்று நடத்துகின்றனர் என உரிய தரப்புக்களிடம் முறையிடப்படுகின்றது.

அண்மையில் ஓர் உள்ளூராட்சி சபையில் இடம்பெற்ற அமர்வில் நிர்வாக நடைமுறையே தெரியாத உறுப்பினர்கள் நிர்வாக அதிகாரிகளிடம் நடந்த முறைமை காரணமாக, அந்த அதிகாரிகளில் ஒருவர் 'நான் இந்தச் சபையில் இருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு நாள் வீதம் எனது ஆயுள் குறையும். அதற்கு நீங்களே பொறுப்பு. என்ற பிள்ளைகள்தான் பாவம்!' என அழாக் குறையாகக் கூறியுள்ளார்.

இன்னொரு அதிகாரியோ 'நாம் நிர்வாக சேவை முடித்தமை உள்ளூராட்சி சபை உறுப்பினர்களிற்கு ரீ ஊத்த வென்பது இப்பதான் தெரியும், பியோன் இல்லாத சமயம் வெளியார் வந்தால் அவர்களுக்காக நாம் ரீ ஊத்த வேண்டும் என்கின்றனர். அதனால் என்னை மாற்றி விடுங்கள்!' – என முறையிட்டுள்ளார்.

இன்னுமோர் சபையின் தவிசாளருக்கோ எது, எங்கு இருக்கின்றது என்பதை எடுத்துக் கொடுக்கவே 3 பேர் தேவையாக உள்ளனராம். ஆகவே எம்மை மாற்றுங்கள் அல்லது சம்பளமற்ற விடுமுறையில் செல்வதை தவிர வேறு வழியில்லை எனத் தனது உள்ளக் குமுறலை மேலிடத்தில் கொட்டியுள்ளார் இன்னொருவர்.

ஓர் சபையின் பொறுப்பதிகாரியோ "நிர்வாகத்தில் ஒழுக்கமாக இருக்கத் தெரியாது எனப் பணியில் இருந்து கலைக்கப்பட்டவன் எல்லாம் உறுப்பினராய் வந்து கேள்வி கேட்க, அதற்கு பதிலளிக்க முடியாது. அதனால் மாற்றி விடுங்கள். வெளிமாவட்டத்திற்கும் செல்லத் தயார். ஏற்கனவே 10 வருடம் வெளி மாவட்டத்தில் பணியாற்றி வந்தபோதும் இப்படி சீர் கெட்டுப் பணியாற்ற முடியாது. மாகாண சபையில் தற்போது அதிக வெற்றிடங்கள் ஏற்படுகின்றன. அந்த இடங்களிற்கேனும் மாற்றுங்கள்" எனக் கோருகின்றார்.

இவை, இப்படி என்றால், இதற்கும் ஒரு படி மேலே போய் ஒரு சபையின் தவிசாளருக்கு எதிராக அதிகாரிகள் வீதிக்கு சென்றபோது, உப தவிசாளர் தலையிட்டு அதகாரிகளை அலுவலகத்திற்குள் அழைத்து வந்து இப் போதைக்குச் சமாளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சபை ஒன்றின் அதிகாரிகள் சிலர், அதிகாரிகளின் அதிகார வரம்பு தொடர்பில் நீதிமன்றை நாட ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆக மொத்தம் தேர்தல் நடந்து சபை வந்தால் தீர்வு கிடைக்கும், அபிவிருத்தி வரும் என எதிர்பார்த்தவர்களுக்கு பொழுது போக்கிற்கு நகைச்சுவை மட்டும்தான் மிச்சம்போல் உள்ளது.

* * *

மொட்டுக் கட்சிக்கு இது போறாத காலம் போலும். கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் அவரின் சகோதரர் ஒருவரும் ஐஸ் போதைப் பொருள் தயாரிப்புக்கான இரசாயன மூலப் பொருள்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்களுடன் சிக்கி இருக்கின்றமையை அடுத்து நாட்டில் முழு போதைப் பொருள் கடத்தல் வர்த்தகம் மற்றும் பாதாள உலக குழுக்களின் நடவடிக்கைக்கு மொட்டுக் கட்சியே முழுக் காரணம் என்ற மாதிரியான பிரசாரத்தை – கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி – ஆளும் தரப்பு திட்டமிட்டு முன்னெடுப்பதாக மொட்டு கட்சியினர் சீறுகின்றனர்.

தனிப்பட்ட விடயமாக நேற்று காலையில் கேரளா சென்ற மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ பெரும்பாலும் இன்று பகல் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமது கட்சிக்கு எதிராக ஆளும் தரப்பினால் திட்டமிட்டுப் பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக சீற்றதுடன் கூறும் நாமல் ராஜபக்ஷ, நாடு திரும்பியதும் ஆளும் தரப்பினருக்கு இந்த விவகாரத்தை ஒட்டி பகிரங்க சவால் ஒன்றை விடுக்க இருக்கின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்தச் சவால் என்ன என்பதை அவர் வாயால் முதலில் கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

போதைப் பொருள் பாவனை தொடர்பான மருத்துவ சோதனை பற்றிய சவாலாக அது அமையக்கூடும். ஆளும் தரப்பில் சிலருக்கு அது நெருக்கடியை தரலாம் என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன.

மொட்டுக் கட்சிக்கு நாடாளுமன்றில் ஆக மூன்றே மூன்று உறுப்பினர்கள் தான். ஆனால் ஆளும் தரப்புக்கு 159 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் சில கறுப்பு ஆடுகள் இருப்பதை அடையாளம் கண்டுதான் நாமல் ராஜபக்ஷ தமது சவாலை முன்வைக்கத் தயாராகின்றாரோ என்னவோ....!

# ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கான இரசாயனப் பொருள்கள் கண்டுபிடிப்பு



தங்காலை, நெடொல்பிட்டிய பகுதியில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மித்தெனியவில் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட இரசாயனப் பொருள்களும் நேற்று கைப்பற்றப்பட்ட இந்த இரசாயனப் பொருள்களும் ஒரே தரப்பினரால் கொண்டுவரப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இந்த இராசயனப் பொருள்களின் மாதிரிகள் மேலதிக விசாரணைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தங்காலை நீதிமன்றத்தில் இன்று விடயங்களை முன் வைக்கவுள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, மித்தெனியவில் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட இரசாயனப் பொருள்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

விஜேவிக்ரம மனம்பேரிகே பியல் சேனாதீர என்ற 38 வயதுடைய நபரே மேற்படி சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான சம்பத் மனம்பேரியின் சகோதரராவார்.

தடுப்புக்காவலிலுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான பெக்கோ சமனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வெளிவந்த தகவலின் அடிப்படையில் மித்தெனியவிலுள்ள காணியொன்றிலிருந்து 50,000 கிலோகிராம் இரசாயனப் பொருள்கள் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன.



# பிறந்து 21 நாள்களேயான ஆண் சிசு யாழில் உயிரிழப்பு

பிறந்து 21 நாட்களேயான ஆண் சிசு ஒன்று வாந்தியெடுத்தபின் உயிரிழந்த சம்பவம் யாழில் பதிவாகியுள்ளது.

சுன்னாகம் – சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த தம்பதிகளின் சிசுவே உயிரிழந்துள்ளது.

தாயார் நேற்று சிசுவிற்கு பாலூட்டி உறங்க வைத்த பின்னர் மதியம் 1.30 அளவில் சிசுவை தூக்கத்திலிருந்து எழுப்பியவேளை சிசு வாந்தியெடுத்து விட்டு அசைவற்று காணப்பட்டது.

இந்நிலையில், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற வேளை, சிசு ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சிசுவின் உடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

மேலும், சிசுவின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.



# தேசிய மக்கள் சக்தியின் நூலகம் யாழ்ப்பாணத்தில் நேற்று திறப்பு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய வளாகத்தில் அமைந்துள்ள பொது நூலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவால் பிற்பகல் 5.20 மணியளவில் இந்தப் பொது நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் நூலகத்துக்கான நூல்களை அன்பளிப்புச் செய்தனர்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை அறிக்கை புத்தகமும் யாழ். ஊடக அமையத்தின் தலைவர் மற்றும் போசகரால் தேசிய மக்கள் சக்தியின் நூலகத்துக்கு இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.















# மஹியங்கனை ரஜமஹா விகாரையின் பெரஹெராவைப் பார்த்தார் ஜனாதிபதி

வரலாற்று சிறப்புமிக்க மஹியங்கனை ரஜமஹா விகாரை மற்றும் ஸ்ரீ சுமன சமன் மகா விகாரையில் 2025 எசல மகா பெரஹெரவிற்காக நேற்று முன்தினம் பிற்பகல் மஹியங்கனை புனித ஸ்தலத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மத அனுஷ்டானங்களை நிறைவேற்றி ஆசிர்வாதம் பெற்றார்.

பின்னர் ஜனாதிபதி, அஸ்கிரி விஹாரை தரப்பின் சிரேஷ்ட குழு உறுப்பினர், மஹியங்கனை ரஜமகா விஹாரையின் விகாராதிபதி வண. உருளேவத்தே ஸ்ரீ தம்மரக்கித நாயக்க தேரரை சந்தித்து, அவரது நலம் விசாரித்ததுடன், சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

தேரர் இதன்போது, ஜனாதிபதிக்கு தனது ஆசிர்வாதங்களைத் தெரிவித்ததுடன், சிறப்பு நினைவுப் பரிசையும் வழங்கினார்.

பின்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க மஹியங்கனை ரஜமஹா விஹாரை மற்றும் ஸ்ரீசுமண சமன் மகா விகாரையின் 2025 எசல மகா பெரஹெராவின் நான்காவது ரந்தோலி பெரஹெராவின் ஆரம்ப நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஹஸ்தி ராஜா யானை மீது புனித கலசத்தை வைத்த ஜனாதிபதி, பிரதேச மக்களுடன் பெரஹெராவைக் காண இணைந்துகொண்டார்.















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## காதில் பூச்சுற்றும் ரில்வின்

யாழ்ப்பாணத்துக்கு வந்து, தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றியிருக்கின்றார் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா.

“எங்களுடைய நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வெளிப்புற சக்திகளை அழைக்க வேண்டிய தேவை இல்லை. முன்னைய அரசாங்கங்கள் இருந்தபோது இங்கு எதுவித விசாரணைகளும் இடம்பெறவில்லை என்பது உண்மை. ஏனென்றால் இங்கு இடம் பெற்ற குற்றங்களுடன் கடந்த கால ஆட்சியாளர்கள் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். குற்றத்தை செய்தவர்கள் ஒருபோதும் நியாயத்தை வழங்க மாட்டார்கள். ஆனால் தற்போது இருப்பது மக்களுடைய அரசாங்கம். எனவே மக்களுக்கு நியாயத்தை வழங்குவது எமது பொறுப்பாகும். நீதியை வழங்குவதற்கு சர்வதேச தலையீடுகள் தேவையில்லை. எங்களுடைய நாட்டுக்குள்ளேயே எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். எனவே இலங்கையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அது பற்றி எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை” - என்று தமிழ் மக்களை ஏமாளிகள் என்ற கணக்கில் உரைத்திருக்கின்றார் அவர்.

ஏதோ முன்னிருந்த ஆட்சியாளர்கள் மட்டுமே இங்கு இடம்பெற்ற குற்றங்களுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள், குற்றத்தைச் செய்தவர்கள் ஒருபோதும் நியாயம் வழங்க மாட்டார்கள், ஆனால் இப்போது இருப்பது எங்களுடைய அரசாங்கம், அது குற்றம் செய்யவில்லை என்ற கணக்கில் அவர் கதை விட்டு இருக்கிறார்.

யுத்தத்துக்கு தேவையான சிங்களப் படை அணியைத் திரட்டி கொடுத்தது அவரது ஜே.வி.பிதான். சமாதான முயற்சிகளைக் குழப்பி, தமிழர் தேசம் மீது தீவிர யுத்தத்தை முன்னெடுக்க ஊக்கமளித்துப் பங்களித்தவர்களே இதே ரில்வின் சில்வா உட்பட்ட ஜே.வி.பியினர்தான். தமிழர்களின் தேசம் மீது சந்திரிகாவின் அரசும் மஹிந்தவின் அரசும்கொடூரயுத்தத்தைத்தொடுத்து, போர்க் குற்றங்களை இழைத்து, இனவழிப்பை மேற்கொண்டு, மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்களைப் புரிந்த போது, அந்த அரசுகளின் பங்காளிகளாக இருந்து, அவற்றுக்குத் தூண்டியவர்களே இதே ஜே.வி.பியினர்தான். அவர்களும் இந்த யுத்தத்தை முன்னின்று நடத்திய சூத்திரதாரிகள்தான். அந்த வகையில் தமிழர் தேசம் மீதான குற்றங்களின் பங்காளிகளே அவர்கள்.

சிங்களப் படைகளுக்கு எதிராக நீதி விசாரணை நடத்த இடமளியோம் என்று சூளுரைத்து நின்றவர்களும் இதே ஜே.வி.பியினர்தான்.

இப்போது யாழ்ப்பாணத்தில் வந்து நின்று கொண்டு ருத்திராட்சப் பூனையாக தத்துவம் பிளக்கின்றார் ரில்வின் சில்வா. அவரது கட்சியின் அரசும் தமிழ் மக்களின் நிலத்தை அடாத்தாகப் பிடுங்கி வைத்து அட்டகாசம் புரியும் முப்படைகளுக்கும் அதற்கான அங்கீகாரத்தை தொடர்ந்து வழங்கி, அந்த அரசும் சேர்ந்து தமிழர்களுக்கு எதிராக இப்போதும் குற்றம் இழைத்துக் கொண்டிருக்கின்றது.

அப்படியிருக்க, இழைக்கப்பட்ட குற்றங்களுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்பது போலவும், தாங்கள் நீதி விசாரணை நடத்தி, தமிழர்களுக்கு நியாயம் செய்யப் போகின்றவர்கள் போலவும் தமிழ் மக்கள் காதில் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றார் ரில்வின்.

பாவம் தமிழர்கள். எல்லா சிங்கள தலைவர்களும் வந்து காதில் பூச்சுற்றிச் செல்லும் அளவுக்கு அப்பாவி முட்டாள்களாக இருக்க வேண்டிய இக்கட்டு அவர்களுக்கு.



# நேற்றிரவின் இரத்த நிலவு சந்திரகிரகணம்

# அறிவியல் - ஆன்மீகத்தின் அரிய சங்கமம்

**மு.நிமியா**
**(ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

வானில் அவ்வப்போது நிகழும் அதிசய நிகழ்வுகளில் ஒன்றுதான் சந்திர கிரகணம். வானில் சூரியனை பூமி சுற்றி வரும், பூமியை சந்திரன் சுற்றி வரும். வருடத்தில் ஓரிருமுறை மட்டும் இந்த மூன்றும் ஒரே நேர்கோட்டில் பயணிக்கும். சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும்போது, பூமியின் நிழல் சந்திரன் மீது விழுந்து, அதன் ஒளியைத் தற்காலிகமாக மறைக்கும் நிகழ்வு சந்திர கிரகணம் எனப்படும். இதன் போது சந்திரனின் பாதி பகுதியோ அல்லது சிறிய அளவு அல்லது முழு பகுதியும் மறைக்கப்படலாம்.

நேற்று ஏற்பட்ட 'இரத்த நிலவு' (Blood Moon) முழு நிலவு சந்திர கிரகணமாகும். சந்திர கிரகணத்தின்போது சந்திரன் சிவப்பு நிறத்தில் தோன்றியதால் 'இரத்த நிலவு' (Blood Moon) என்று அழைக்கப்படுகிறது. செப்டம்பர் 7, 2025 நேற்றைய தினம் ஆரம்பித்த முழு சந்திர கிரகணம், இந்த ஆண்டின் கடைசி மற்றும் அரிதான இரத்த நிலவு நிகழ்வாகும். இந்த அரிய நிகழ்வு, அறிவியல் ரீதியாக எவ்வாறு விளக்கப்படுகிறது, ஆன்மீக மற்றும் கலாசார ரீதியாக பார்க்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம்

### அறிவியல் கண்ணோட்டம்

#### இரத்த நிலவு ஏன் சிவப்பு நிறத்தில் தெரிகிறது?

இரத்த நிலவு என்பது ஒரு முழு சந்திர கிரகணத்தின் போது நிகழ்ந்த ஓர் இயற்கையான வானியல் நிகழ்வு. கிரகணத்தின் போது, சந்திரன் முழுவதுமாக பூமியின் நிழலுக்குள் நுழைகிறது. அப்போது சூரிய ஒளியின் நேரடிப் பார்வை சந்திரனுக்குக் கிடைப்பதில்லை. அதனை புவி மறைத்துவிடும். எனினும், சூரியனில் இருந்து வரும் ஒளிக்கதிர்கள் முழுமையாகத் தடுக்கப்படுவதில்லை. பூமியின் வளிமண்டலம் ஒரு பெரிய வில்லை (lens) போலச் செயல்பட்டு, ஒளியைக் குவித்து, அதை சந்திரனின் மீது செலுத்துகிறது.

இந்த ஒளியானது பூமியின் வளிமண்டலத்தின் வழியே பயணிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட செயல்முறை நிகழ்கிறது. ஒளியில் உள்ள பல்வேறு வண்ண அலைநீளங்களில், நீல நிற ஒளி அலைநீளங்கள் ரெய்லே சிதறல் (Rayleigh Scattering) என்ற நிகழ்வு காரணமாக வளிமண்டலத்தில் அதிக அளவில் சிதறடிக்கப்படுகின்றன. வானம் நீல நிறத்தில் தெரிவதற்குக் காரணமும் இதுவே. ஆனால், சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிற அலைநீளங்கள் குறைவான சிதறல் அடைவதால், அவை வளிமண்டலத்தைத் தாண்டிச் சென்று பூமியின் நிழல் வழியாகப் பயணித்து சந்திரனின் மீது விழுகின்றன. இதன் விளைவாக, நிலவு பழுப்பு, செம்பு அல்லது அடர் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கிறது. இந்த நிகழ்வுதான் 'இரத்த நிலவு' என அறிவியல் பூர்வமாக அழைக்கப்படுகிறது.

இந்த ஒளியின் நிறமும் அதன் அடர்த்தியும் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள தூசி, மேகங்கள் மற்றும் பிற துகள்களின் அளவைப் பொறுத்து மாறுபடும்.

இந்த முழு சந்திர கிரகணத்தின் அறிவியல் தகவல்களை ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் பேராசிரியர் சந்தன ஜெயரத்ன உறுதிப்படுத்தியுள்ளார். அவருடைய கூற்றுப்படி, இந்த முழு சந்திர கிரகணம் இந்திய மற்றும் இலங்கை நேரப்படி இரவு 8:58 மணிக்குத் தொடங்கி அதிகாலை 2:25 மணிக்கு முடிவடைகிறது. இதில், முழு கிரகணத்தின் காலகட்டம் இரவு 11:01 முதல் நள்ளிரவு 12:22 வரை இருக்கும், அப்போது சந்திரன் மிகவும் தெளிவாகவும், அடர் சிவப்பு நிறத்திலும் காணப்படும். இது சுமார் 82 நிமிடங்கள் நீடிக்கும் ஒரு நீண்ட கிரகணமாகும். இந்த நிகழ்வு ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் தெளிவாகத் தெரியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கிரகணம் தென்பட்ட முக்கிய நேரங்கள் வருமாறு:-

கிரகணம் தொடங்கியது இரவு 8:58 மணிக்காகும். பகுதிக் கிரகணம் தொடங்குகியது இரவு 9:57 மணிக்காகும். முழு கிரகண ஆரம்பம் இரவு 11:01 மணிக்கு மற்றும் அதிகபட்ச கிரகணம் இரவு

தொடர்ச்சி ▼



# நேற்றிரவின் இரத்த நிலவு சந்திரகிரகணம்

# அறிவியல் - ஆன்மீகத்தின் அரிய சங்கமம்

தொடர்ச்சி ▲

11:42 மணிக்கும் காணகிடைத்தது. முழு கிரகணம் அதிகாலை 12:22 மணி (இன்று செப்டம்பர் 8) முடிவடைந்தது.

பகுதி கிரகணம் அதிகாலை 1:26 மணி (செப்டம்பர் 8) முடிவடைந்தது.

முழுமையான கிரகணம்அதிகாலை 2:25 மணி (செப்டம்பர் 8) முடிவடைந்தது.

**ஆன்மீகமும் நம்பிக்கைகளும் புராணக் கதைகள், சடங்குகள்**

அறிவியல் விளக்கம் ஒருபுறம் இருந்தாலும், சந்திர கிரகணம் பல நூற்றாண்டுகளாக மக்களின் ஆன்மிக மற்றும் கலாசார நம்பிக்கைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இந்து மத புராணங்களில், கிரகணங்கள் ராகு மற்றும் கேது என்ற நிழல் கிரகங்களால் ஏற்படுகின்றன என்று நம்பப்படுகிறது. தேவலோகத்தில் பாற்கடலைக் கடைந்தபோது, அமிர்தம் வெளிப்பட்டதாகவும், அதை அசுரர்களும் தேவர்களும் பங்குபோட்டுக் கொண்டனர் எனவும் ஒரு கதை உண்டு. அப்போது, 'ஸ்வர்பானு' என்ற அசுரன் ஒரு தேவதையைப் போல வேடமிட்டு அமிர்தத்தை அருந்தினான். இந்த சூழ்ச்சியைக் கண்ட சூரியனும் சந்திரனும் இதை மகாவிஷ்ணுவிடம் கூறினர். கோபமடைந்த விஷ்ணு, தனது சக்கரத்தால் ஸ்வர்பானுவின் தலையை வெட்டினார். அமிர்தம் அருந்தியதால் அவனது தலையும் முண்டமும் சாகாத தன்மை பெற்றன. தலை ராகு என்றும், உடல் கேது என்றும் அழைக்கப்பட்டன. அவர்கள் தங்களைப் பற்றிக் காட்டி கொடுத்த சூரியனையும் சந்திரனையும் பழிவாங்க, அவ்வப்போது அவர்களை விழுங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்த நிகழ்வே சூரிய, சந்திர கிரகணங்களாகக் கருதப்படுகின்றன.

இந்த நம்பிக்கையின் காரணமாக, கிரகணக் காலம் ஒரு அசுபமான நேரமாகக் கருதப்படுகிறது. அந்தக் காலத்தில் சில சடங்குகளும் பழக்க வழக்கங்களும் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக –

# உணவு உண்ணுதல் தவிர்த்தல்: கிரகண காலத்தில் உணவு சமைப்பதோ, உண்பதோ தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. கிரகணக் கதிர்வீச்சு உணவை மாசுபடுத்தும் என்ற நம்பிக்கை இதற்குப் பின்னால் உள்ளது. கிரகணத்திற்கு முன்பு சமைத்த உணவுப் பொருள்களில் அறுகம்புல் அல்லது துளசி இலைகளைப் போட்டு வைக்கும் பழக்கமும் உண்டு.

# கோயில்கள் நடை சாத்துதல்: பெரும்பாலான இந்து ஆலயங்கள் கிரகண நேரத்தில் பக்தர்களுக்காக மூடப்படுகின்றன. இது தீய சக்திகளின் தாக்கம் அதிகம் இருக்கும் என்ற நம்பிக்கையால் பின்பற்றப்படுகிறது.

# கர்ப்பிணிப் பெண்கள் வெளியே வராதது: கர்ப்பிணிப் பெண்கள் கிரகணத்தின்போது வெளியே வரக்கூடாது என்று பரவலாக நம்பப்படுகிறது. இது கருவில் உள்ள குழந்தையைப் பாதிக்கும் என்ற அச்சத்தின் காரணமாகப் பின்பற்றப்படுகிறது.

கிரகணம் முடிந்ததும், குளித்துவிட்டு, வீடு மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவது ஒரு முக்கியமான சடங்கு. இதன் மூலம் கிரகணத்தின் தீய விளைவுகள் நீங்கும் என்று நம்பப்படுகிறது.

**வரலாற்றுச் சிறப்பும் பொதுப் பார்வையும்**

சந்திர கிரகணம் என்பது வெறும் ஒரு வானியல் நிகழ்வு மட்டுமல்ல, அது பல நூற்றாண்டுகளாக மனித குலத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பண்டைய காலத்தில், இது ஒரு அச்சுறுத்தலான நிகழ்வாகக் கருதப்பட்டது. ஆனால், அறிவியல் வளர்ச்சியால் அதன் உண்மையான காரணம் அறியப்பட்ட பின்னர், இது ஒரு கண்கவர் காட்சியாகவும், வானியல் ஆய்வாளர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பாகவும் பார்க்கப்படுகிறது.

இந்த முழு சந்திர கிரகணத்தை வெறும் கண்களால் பார்ப்பது முற்றிலும் பாதுகாப்பானது.

தொடர்ச்சி ▼



# நேற்றிரவின் இரத்த நிலவு சந்திரகிரகணம்
# அறிவியல் - ஆன்மீகத்தின் அரிய சங்கமம்

தொடர்ச்சி▲

தொலைநோக்கி அல்லது பைனாகுலர் பயன்படுத்தினால், நிலவின் சிவப்பு நிறத்தை இன்னும் தெளிவாகக் காணலாம். கொழும்புப் பல்கலைக்கழகம் போன்ற பல கல்வி நிறுவனங்கள் இந்த நிகழ்வை மக்கள் கண்டு ரசிப்பதற்காக சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

வானம் தெளிவின்மையால் நாட்டின் ஒரு சில இடங்களில் இந்த இரத்த நிலவை முழுமையாகக் காண முடியாமல் போனது.

இந்த கிரகணம் இந்த ஆண்டின் கடைசி முழு சந்திர கிரகணம் என்பதும், அடுத்த முழு சந்திர கிரகணம் டிசம்பர் 2028 இல் தான் நிகழும் என்பதும் இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்தது.இது வானியல் ஆர்வலர்களுக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் ஒரு மறக்க முடியாத அனுபவம்

‘நிலா நிலா ஓடி வா நில்லாமல் ஓடி வா....’என்று நேற்றைய நாள் முழுவதும் உலக மக்களின் கவனத்தை இரத்த நிலவு சந்திர கிரகணம் ஈர்த்தது.

கர்ப்பிணிப் பெண்களை கவனமாக இருக்க சொல்லுவதும், சாப்பாட்டு நேரத்திற்கு முன் சாப்பிடுவதும், சாப்பாட்டில் அறுகம்புல் போடுவதும் என நேற்றைய நாளில் இலங்கை மக்களையும் மிகவும் பரபரப்புடன் வைத்திருந்தது இரத்த நிலவு’ சந்திர கிரகணம்.சிலர் இரத்த நிறத்தில் சந்திர கிரகணமா என பயந்து தயங்கி வெளியில் வராமல் இருந்தனர். பலர் காணக் கிடைக்காத அரிய வாய்ப்பு என ஆர்வத்துடன் வெளியில் வந்து நிலவை இரசித்தனர்.

இரத்த நிலவு என்பது அறிவியல் மற்றும் ஆன்மிகம் என இரு வேறுபட்ட உலகங்களை இணைக்கும் ஒரு தனித்துவமான நிகழ்வு. அதன் அறிவியல் விளக்கம் ஒருபுறம் இருந்தாலும், அது மக்களின் கலாசாரத்திலும், நம்பிக்கைகளிலும் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது. இந்த இரத்த நிலவு, வானியல் ஆர்வலர்களுக்கு ஒரு வாய்ப்பாகவும், பொது மக்களுக்கு ஒரு கண்கவர் காட்சியகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.


# காற்றின் தரத்தை அறிந்துகொள்ள தேசிய இணையத்தளம் அறிமுகம்

காற்றின் தரத்தை அறிந்துகொள்வதற்காக தேசிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

காற்றின் தரம் தொடர்பில் ஒவ்வொரு பிரஜைகளும் அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த இணையத்தளம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

சுற்றாடல் பிரதியமைச்சர் அன்டன் ஜெயக்கொடி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

මධ්‍යම පරිසර අධිකාරිය
மத்திய சுற்றாடல் அதிகாரசபை
Central Environmental Authority




# நிமலராஜனின் படுகொலைக்கு நீதி 25 ஆண்டுகளாகியும் கிட்டவில்லை

## ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களைப் பாதுகாத்துள்ள இலங்கை

**'ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களைப் பாதுகாத்துள்ள இலங்கை – பி.பி.சியின் செய்தியாளரின் கொலை பற்றிய விசாரணையில் ஏற்பட்ட தோல்வியினை ஆராயும் அறிக்கை' என்ற பெயரில் ஓர் அறிக்கையை ஜஸ்மின் சூக்காவை நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டமும் (ITJP) மற்றும் சுநுனுசுநுளுளு அமைப்பும் நேற்று வெளியிட்டுள்ளன. நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகும் காலகட்டத்தில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.**

ஜொகானஸ்பேர்க் – இலங்கை கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகவியலாளர்களின் கொலைகளைத் திட்டமிட்ட ரீதியில் பாதுகாத்து வருவதாக 2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இடம்பெற்ற பி.பி.சி. யின் யாழ் செய்தியாளரான மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை குறித்த பொலிஸ் விசாரணைகளின் தோல்விகள் பற்றி ஆராயும் ஒரு புதிய அறிக்கை தெரிவிக்கின்றது.

குறைந்தது 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் 2000 ஆம் ஆண்டுக்கும் 2010 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் உள்நாட்டுப் போர் குறித்து செய்தி வெளியிட்டு வந்த வேளையில் கொல்லப்பட்டார்கள். இன்று வரை, இந்தக் கொலைகள் எவற்றுக்காகவும் ஒரு குற்றவாளியும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

"இவ்வாறு தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலைமை, தமது உயிர்களை ஆபத்திற்குள்ளாக்கி

தொடர்ச்சி ▼

# நிமலராஜனின் படுகொலைக்கு நீதி 25 ஆண்டுகளாகியும் கிட்டவில்லை

தொடர்ச்சி ▲

சுயதணிக்கை செய்து அல்லது நாடு கடந்து வாழும் இலங்கையச் சேர்ந்த ஏனைய ஊடகவியலாளர்களுக்கு அச்சமூட்டும் செய்தியினை அனுப்புவதாக” சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் (ITJP) நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ITJP மற்றும் REDRESS இனால் இணைந்து எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த 70 பக்க அறிக்கையானது, பிபிசி இன் செய்தியாளரான நிமலராஜன் மயில்வாகனம் அவர்களின் கொலை குறித்த இலங்கைப் பொலிஸாரின் விசாரணை பற்றிய ஒரு தடயவியல் ஆய்வினை வழங்குகின்றது. அத்துடன் ஒரு வழக்கு எப்படி இடம்பெறக் கூடாதோ அதற்கு உதாரணமான விசாரணைத் தோல்விகளைக் கொண்ட ஒரு வழக்கு இது எனவும் இந்த அறிக்கை முடிவுசெய்துள்ளது. கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடம் ஒரு போதும் பாதுகாக்கப்பட்டு ஆவணப் படுத்தப்படவில்லை – படங்கள் எதுவும் எடுக்கப்படவுமில்லை அல்லது தடயவியல் ஆதாரங்கள் எதுவும் சேகரிக்கப்படவுமில்லை. பல இராணுவச் சோதனை நிலையங்களால் சூழப்பட்ட ஒரு உயர் பாதுகாப்பு வலயத்தில் இறுக்கமான ஊடரங்கு உத்தரவு அமுலில் இருந்த வேளையில் இந்தக் குற்றம் இடம்பெற்ற போதிலும் நிமலராஜனின் வீடு ஒரு போதுமே சுற்றிவளைக்கப்படவில்லை. சம்பவம் இடம்பெற்ற இரவு கடமையில் இருந்த சில பாதுகாப்பு படையினரை விசாரிப்பதற்கே பல வருடங்கள் எடுத்தன. ஆனாலும், பலர் ஒரு போதுமே அடையாளங் காணப்படவும் இல்லை, விசாரணைக்கு உட்படுத்தப்படவுமில்லை. தடய அறிவியல் ஆதாரங்கள் சரியான முறையில் கையாளப்படவில்லை. அத்துடன் பகுப்பாய்வுகளும் புரிந்து கொள்ள முடியாத அளவற்கு தாமதமடைந்தன. நிமலராஜனுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் அல்லது அவருக்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், அதற்குப் பதிலாக விநோதமான முறையில் அவரது வங்கிக் கணக்கு விசாரணக்குட்படுத்தப்பட்டது.

பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் சுதந்திரமாகச் சுற்றித்திரியவும், மேலும் கொலைகளைச் செய்யவும் பின்னர் நாட்டை விட்டு வெளியேறவும் அனுமதிக்கப்பட்டார்கள். சந்தேக நபர்கள் விசாரணை செய்யப்பட்ட போது அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கூறியபோது அதனை மேலும் ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு குற்றஞ்சுமத்தப்படாமல் விடுதலை

செய்யப்பட்டார்கள். கவலை தரும் வகையில், இந்த வழக்குடன் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் அடிக்கப்பட்டு காயங்களுடன் வந்ததுடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சித்திரவதை செய்யப்பட்டதுடன் பொய்யான ஒப்புதல் வாக்கு மூலங்களில் கையொப்பமிடவும் நிர்பந்திக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

இதற்கிடையில், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் (EPDP) உறுப்பினர்கள் இந்தக் கொலைக்குப் பொறுப்பானவர்கள் என சொல்லப்படுகின்ற போதிலும் அந்தக் கட்சியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா இந்தக் கொலை பற்றி பொலிஸாரால் ஒரு போதும் விசாரணை செய்யப்படவில்லை. பதிலாக 2000 ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட எல்லா அரசாங்கத்தினாலும் திரும்பத்திரும்ப அமைச்சரவை அமைச்சர் ஆக்கப்பட்டிருக்கின்றார். 2024 இல் மட்டும் தனது பதவியை இழந்தாலும் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்திருக்கின்றார். மாறாக, தமது மகனைக் கொன்றவர்களுக்கு நீதிகிடைக்க காத்திருந்த வேளையில் நிமலராஜனின் தாய் மற்றும் தந்தையர் கனடாவில் வசித்து வந்த வேளையில் இறந்துபோனார்கள்.

இலங்கையில் நம்பத்தகுந்த உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் இல்லாத நிலையில், ஐக்கிய

இராய்ச்சியமானது இந்த வரலாற்றுக் குற்றம் பற்றி விசாரணை ஒன்றினை மேற்கொண்டுள்ளது. 25 பெப்ரவரி 2022 இல் மெட்ரோபொலிட்டன் பொலிஸாரின் போர்க்குற்ற பிரிவு அணி 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் உள்நாட்டுப் போருடன் தொடர்புபட்ட போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து ‘முன்னேற்றமான விசாரணைகளை’ மேற்கொண்டதையடுத்து நிமலராஜனின் கொலைக்காக இங்கிலாந்தின் நொதம்டன்ஸியரில் பெயர் குறிப்பிடப்படாத 48 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டது பற்றி அறிவித்தது. தமது விசாரணையைத் தொடர்வதாகவும் அத்துடன் விசாரணைக்கு உதவக்கூடிய வகையில் இந்தச் சம்பவம் பற்றி நேரடித் தகவல்களை வைத்திருப்பவர்களிடமிருந்து அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் கூறி போர்க் குற்ற அணி ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்தது. சந்தேக நபரின் அடையாளத்தினைப் பிரிட்டன் பொலிஸார் பகிரங்கப்படுத்தவில்லை, ஆனால் இந்த நபர் இலங்கையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது சந்தேகநபராக பெரிதும் நம்பப்படும் ஈபிடிபி உறுப்பினரான ‘நெப்போலியன்’ ஆவார். இவரைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. ஆனால்

அவர் கைது செய்யப்படுவதில் இருந்து தப்பி நாட்டைவிட்டுச் சென்றுவிட்டார். 2017 இல், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யும்

பிரித்தானிய மெற்றோ பொலிற்ரன் பொலிஸினுடைய பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் கீழ் உள்ள ஒரு விசேட பிரிவுக்கு ITJP மற்றும் றெட்றெஸ் (REDRESS) ஒரு பரிந்துரையை மேற்கொண்டது.

2023 இல், இந்தப் பரிந்துரையினையடுத்து, 2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒரு அரசியல் பேரணியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களுடன் தொடர்புபட்டதாக இன்னுமொருவர் கைது செய்யப்பட்டார். “சம்பந்தப்பட்ட அரசானது நடவடிக்கை எடுக்கத் தவறும் போது பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்துவதில் பிரிட்டன் போன்ற நாடுகள் எவ்வாறு முக்கிய பங்கினை வகிக்க முடியும் என்பதனை இந்த வழக்கு காட்டுகின்றது” என றெட்றெஸின் (REDRESS) பணிப்பாளர் றுபேட் ஸ்கில்பேக் தெரிவித்தார்.

உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வடபகுதி யாழ்க்குடாநாட்டில் இருந்து செய்திகளை சுயாதீனமாக வெளியிட்ட குரல்களில் ஒன்றாக இருந்த நிமலராஜன் பிபிசி சிங்கள சேவையின் செய்தியாளரகவும், பல தமிழ் ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி உதவியவராகவும் இருந்தார். இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றும் துணை ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பியினரால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் வன்முறை மற்றும் வாக்கு மோசடிபற்றிய விமர்சன அறிக்கைகளை வெளியிட்டதையடுத்து 19 ஒக்ரோபர் 2000 இல் அவர் படுகொலை செய்யப்பட்டார். நிமலராஜனின் வரலாறு நிலைத்து நிற்கக் கூடியதாக இவர் பணியாற்றிய பிபிசி, இலண்டனில் ஒரு சந்திப்பு அறைக்கு இவரது பெயரைச் சூட்டியுள்ளது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் மயில்வாகனத்தின் வாழ்க்கையை அவரது நண்பர்கள் நினைவு கூர்ந்து வருகின்றனர்.



# நிறைவேற்றப்படாத நீதியின் மீள்பரிசீலனை...

## ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை குறித்த அறிக்கை வெளியீடு

**2025.09.08 ம் திகதி**

**பி.ப. 2.30 தொடக்கம் 5.30 வரை**

**இலங்கை மன்றக் கல்லூரியில்**

### கருத்துகள்

- சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவில் சமூக செயற்பாட்டாளர் **மந்தனா இஸ்மயில் அபேவிக்ரம**
- முரசு பத்திரிகையின் ஆசிரியர் **என்.வித்யாதரன்**
- பிரதம ஆசிரியர் அனித்தா பத்திரிகை **கே. டப்லியூ. ஜனரஞ்சன**

**ஊடகவியலாளர்கள் ஒருசிலரின் சுருக்கமான கருத்து கூறலுடன்**

## சகோதர உங்களை அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு 0763603737 | 0777234584 | 0762789001

ஏற்பாடு

**අතුරුදහන්වූවන්ගේ පවුල් එකතුව**
**காணாமற்போனாரின் குடும்ப ஒன்றியம்**
**Families of the Disappeared**




# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மணடைதீவில் சாத்தியமாகுமா?

பகுதி - 02

- ந.லோகதயாளன் -

(நேற்றைய தொடர்ச்சி)

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மண்டைதீவு கிராம சேவகர் பிரிவில் அமையும் இந்த சர்வதேச துடுப்பாட்ட மைதானத்தை இலங்கை தேசிய துடுப்பாட்டச் சம்மேளனமே அமைக்கின்றது.

இதற்காக ஆரம்பத்தில் 50 ஏக்கர் நிலம் கோரப்பட்டபோது நில அளவீடுகள் மூலம் அது உறுதி செய்யப்பட்டு 49 ஏக்கர் நிலம் அடையாளப்படுத்தப்பட்டது. முன்னைய அரசில் இவற்றிற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட்டபோது வெறுமனே துடுப்பாட்ட மைதானம் மட்டும் அமைத்தால் போதாது தங்கு விடுதி, உணவகம், வாகனத் தரிப்பிடம் மற்றும் இதர வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும், அவற்றையும் துடுப்பாட்ட சம்மேளன மேற்பார்வையில் முன்னெடுப்பதா என்ற சமயம் சில சில சர்ச்சைகள் ஏற்பட்டன.

இறுதியில் ஏனைய கட்டுமானத்திற்காக குறைந்தது 30 ஏக்கர் நிலம் மேலதிகமாகத் தேவை என உறுதி செய்யப்பட்டது. இதனால் தற்போது இனம் காணப்பட்ட 49 ஏக்கர் நிலத்தின் அருகே உள்ள அரச காணியில் இருந்தே 30 ஏக்கர் நிலத்தைப் பெற முடியும் எனக் கூறப்பட்டது.

அதனால் இங்கே ஒரு விளையாட்டரங்கு வருமானால் தற்போதுள்ள 49 ஏக்கர் நிலத்திற்கு மேலதிகமாக குறைந்த பட்சம் இன்னமும் 30 ஏக்கர் நிலமேனும் வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இதற்கு இடையில் இன்னுமோர் நகைச் சுவையும் இடம்பெற்றது.


2021ஆம்ஆண்டு-அதாவதுமண்டைதீவில்49ஏக்கர் நிலமே காணாது எனவும் மேலும் 30 ஏக்கர் வேண்டும், இல்லை மேலும் 50 ஏக்கர் வேண்டும் என்ற சர்ச்சைகளின் இடையில் திட்டம் தொங்கு நிலை காணப்பட்டபோது, யாழ்ப்பாணம் மாநகர சபையின் அப்போதைய முதல்வர் வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான கோண்டாவில் நிலத்தில் 10 ஏக்கர் நிலத்தை வழங்கி, அதில் துடுப்பாட்ட மைதானத்தை அமைக்க ஓர் பிரேரணையை மாநகர சபையில் கொண்டு வந்தார். அப்பகுதி முழுமையான விவசாய விளை நிலம், அங்கே விளையாட்டு அரங்கு வந்தால் முழுமையான வர்த்தக வலயமாக அது மாறும், அதனால் அப்பகுதியில் துடுப்பாட்ட மைதானம் அமைக்க நிலம் வழங்க முடியாது என மாநகர சபையில் அதற்கான பிரேரணை தோற்கடிக்கப்பட்டு, அத்தோடு அந்த யோசனை முடிவுறுத்தப்பட்டது.

மன்டைதீவில் வழங்கிய 50 ஏக்கரே போதாது என்போரிடம் 10 ஏக்கரை வழங்கியிருப்பின் அது ஒட்டகத்திற்கு இடம் வழங்கிய கதையாக மாறியிருக்கும்.

இத்தனை சம்பவங்களையும் திரை மறைவிட்டு, புதியதோர் முயற்சி வடக்கில் புதிய விளையாட்டரங்கு என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றது. இது அமைக்கப்படும் என்றும் எண்ண முடியாது. ஏனெனில் இவ்வாறுதான் கிளிநொச்சியில் ஓர் சர்வதேச மைதானம் என்றார்கள். ஆனால் அது இன்று எந்த முன்னேற்றமும் இன்றிக் காணப்படுகின்றது. மன்னாரில் சர்வதேச மைதானம் என்றார்கள். அது ஆரம்பத்தில் இருந்தே தடைப்பட்டுள்ளது. இவ்வாறெல்லாம் பல ஆண்டுகளாகப் பல மைதானங்கள் தடைப்பட்டிருக்கும்போதும் யாழ்ப்பாணத்திற்கான மைதானம் மட்டும் முழுமையாக அமைத்துக்கொடுக்கப்படும் என எதிர் பார்க்க முடியுமா என்ற வினாவும் உள்ளது.

தொடர்ச்சி▼






# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மணடைதீவில் சாத்தியமாகுமா?

**தொடர்ச்சி▲**

2018 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான விளையாட்டரங்கு திட்டம்போடும்போதே அது 5 ஆயிரம் மில்லியன் ரூபாவில் திட்டமிடப்பட்டது. அப்போது சீமெந்து 980 ரூபா, 16 மில்லிக் கம்பி 920 ரூபாவாகவும் ஒரு டிப்பர் லோட் மணல் 35 ஆயிரம் ரூபாவாகவும் காணப்பட்டது. ஆனால் இன்று இவற்றின் விலைகள் 300 வீத அதிகரிப்பில் நிற்கின்றன.

இந்த திட்டம் நடைமுறைக்கு வருவதானால் அதற்கான நிர்வாக நடைமுறைகளின் அனுமதிகளுக்கே ("பேப்பர் வேர்க்") ஓர் ஆண்டு காலம் போதாது. கட்டுமானத்திற்கும் 3 ஆண்டுகள் போதாது. அப்படியானால் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் மட்டுமல்ல, நாடாளுமன்றத்தின் பதவிக் காலமும் நிறைவடைந்து விடும்.

**(தொடரும்)**







# தையிட்டி விகாரையை அகற்றும்படி கோரி போயா நாளுக்கான ஆர்ப்பாட்டம் நேற்று

**(கி.வசந்தன்)**

யாழ்ப்பாணம், வலி வடக்கு – தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றி பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வெசாக் தினத்தை முன்னிட்டு விகாரையில் விசேட பூசைகள் நடைபெற்ற நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் நேர்ரு மாலை வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பொ.ஐங்கரநேசன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், பொது மக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு முதலியார் சின்னலெப்பை வீதியில் வடிகானில் கழிவுநீர் தேங்கிப் பெருந் துர்நாற்றம்!





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு நகரில் உள்ள முதலியார் சின்னலெப்பை வீதியில் உள்ள வடிகானில் கழிவு நீர் வழிந்தோட முடியாது தேங்கி வழிந்து வீதியில் பரவி நிற்பதுடன் கடுமையான துர்நாற்றமும் வீசி வருவதால் அந்த வீதி ஊடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனக் கடும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வடிகானில் கழிவுப் பொருள்கள் நிறைந்துகாணப்படுகின்றன. அதனூடாக வழிந்து ஓடவேண்டிய கழிவுநீர்வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதுடன் கழிவு நீர் வடிகானை விட்டு வெளியேறி வீதியிலும் பரவி வருகிறது.

இந்ர வடிகானிக் பிளாஸ்டிக் பொருக்கள் குவிந்து காணப்படுவதுடன், மரங்களிம் வளர்ந்து வருகின்றன. கழிவுநீரால் துர்நாற்றம் தாங்க முடியாத அளவுக்கு வீசி வருகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.



# விசர் நாய்க்கடி தொடர்பில் பாலையூற்றில் விழிப்புணர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை பாலையூற்று பகுதியில் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி கடந்த சனிக்கிழமை பெண் ஒருவர் உயிரிழந்தமையை அடுத்து அப்பகுதி மக்களுக்கு அந்த நோய் தொடர்பாக வும், தடுப்பூசி போடுவது தொடர்பாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப் பட்டன. சுகாதார மருத்துவ அதிகாரி களினால் 92 நாய்களுக்கான தடுப் பூசிகளும் போடப்பட்டன.





# விசர்நாய்க் கடியில் உயிரிழந்த மாதுவின் சடலம் மூடப்பட்ட சவப்பெட்டியில் திறக்காமல் அடக்கம்!

## திருகோணமலை பாலையூற்றில் சம்பவம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையூற்று பகுதியில், விசர் நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம் வைக்கப்பட்டிருந்த பிரேத பெட்டி, திறந்து அஞ்சலி செலுத்த அனுமதிக் கப்படாத வகையில் மூடப்பட்டு, சுகா தார அதிகாரிகளின் வழிநடத்தலில் நல்லடக்கம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது :-

திருகோணமலை பாலையூற்றில் தெருநாய் ஒன்று வளர்ப்பு நாய் ஒன் றைக் கடித்துள்ளது. அந்த வளர்ப்பு நாய் வீட்டின் எஜமானியான 58 வயதான பெண் ஒருவரைக் கடித்துள்ளது. இதன் பின்னர் அவர் எந்த தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை. மூன்று மாதங்களின் பின்னர் அந்தப் பெண் சுகவீனமுற்ற நிலையில் தனியார் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந் தார்.சுகவீனம் அதிகரித்த நிலையில் கடந்த வியாழக்கிழமை திருகோண மலை வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி கடந்த சனிக் கிழமை உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோத னைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பிரேதப் பெட்டி திறக்க முடியாத வகையில் மூடப் பட்டு, சனிக்கிழமை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இறந்தவரின் சடலத்தில் இருந்து ஏனையோருக்கு கிருமிகள் தொற்றலாம் என்ற அச்சத் தின் காரணமாக அஞ்சலி நிகழ்விற்கான அனுமதி சுகாதார பிரிவினரால் மறுக் கப்பட்டிருந்தது.

அத்துடன் அந்த வளர்ப்பு நாய் காந்தி நகர் சந்தையை அண்மித்த பகுதியில் விடப்பட்டிருந்தது என்றும் அது அங்கு பலருக்கும் கடித்த பின்னர் வாகனம் ஒன்றில் மோதுண்டு இறந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. இந்நிலை யில் இந் நாயின் கடிக்கு இலக்கான வர்கள் இரத்தப் பரிசோதனையை மேற் கொண்டு தடுப்பூசி போட்டுக் கொள்ளு மாறு சுகாதாரத்துறையினரால் அறிவித் தல் விடுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கு பின் திரு கோணமலையில் நாய் கடிக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# 3,095 கிலோ கழிவுத் தேயிலையுடன் மல்லியப்புவ சந்தியில் இருவர் கைது





(பொகவந்தலாவ எஸ்.சதீஸ், செ.தி.பெருமாள்.)

பயன்படுத்த முடியாத 3,095 கிலோ கிராம் கழிவு தேயிலையுடன் லாரி ஒன்றை இரண்டு சந்தேக நபர்களுடன் ஹட்டன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவி னர் மடக்கியுள்ளனர்.

நேற்று மதியம் 12.30 மணியள வில் ஹட்டன், மல்லியப்புவ சந்தி யில் உள்ள பொலிஸ் சாலைத் தடை யில் இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.

எந்தவொரு அனுமதிப்பத்திரமும் இல்லாமல் தியஹேமதகமவிலிருந்து தலவாக்கலைக்கு கழிவு தேயிலை கொண்டு செல்லப்பட்டபோது ஹட்டன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டது.

இது தொடர்பாக ஹட்டன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். மேலும் சந்தேக நபர்கள் இன்று ஹட்டன் நீதிவான் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.




# புதைகுழிகளில் மீட்கப்படும் எலும்புக்கூடுகள் தொடர்பான உள்நாட்டு விசாரணை அரசைக் காப்பாற்றும் உத்திதான்!

## கிருஷாந்தி நினைவேந்தலில் தவிசாளர் நிரோஷ் உறுதிபடத் தெரிவிப்பு

தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதமும் இனப்படுகொலையும் இலங்கையில் அரச கொள்கையாகவே முன்னெடுக்கப்பட்டன. அவ்விடயத்தில் உள்நாட்டு விசாரணைகளோ அல்லது பொறிமுறைகளோ தீர்வைத்தரா. எமக்கு சர்வதேசத்தின் நீதியே தேவை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

செம்மணியில் கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலையின் 29 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது மண்ணில் சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் என்ற வகை தொகையின்றி இலட்சக்கணக்கானவர்கள் அரச படைகளால் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். அவை சிவிலியன்கள் மீது போரினவாத அரச கொள்கைகளின் வாயிலாக முன்னெடுக்கப்பட்ட அரச பயங்கரவாதமும் இனப்படுகொலையுமாகும். அவ்வகையில் கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட நுற்றுக்கணக்கானவர்கள் முழுமையான அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தினம் தினமாக கொன்றழிக்கப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறாக புதைக்கப்பட்டவர்களின் ஆன்மாக்கள் நீதிகோரி மீண்டெழுந்து நிற்கின்றன.

இப்போது கூட நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த விசாரணையும் சர்வதேசத்தினை ஏமாற்றுவதையும் நீதி விசாரணைகளை காலதாமதத்திற்கு உட்படுத்தி சாட்சியங்களை வலுவற்றதாக்கும் உத்திகளுமாகும். தற்போதும் ஜெனிவாவில் அதற்கான நகர்வு ஒன்றையே அரசாங்கம் மேற்கொள்கின்றது.

நாங்கள் எமது இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வு என்பதில்உறுதியாகச்செயற்படவேண்டிய பொறுப்புடையவர்கள். எமது தேசத்தில் எங்களது பெண் பிள்ளை ஒன்று பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டு புதைக்கப்பட்டிருக்கின்றாள். இது போன்று இராணுவ வளங்கள் உள்ளிட்ட அரச வளங்களைப் பயன்படுத்தி நாங்கள் கொன்றழிக்கப்பட்ட மிகக் கொடுரமான மனித உரிமைகள் மீறல்களுக்கு இன்றும் தீர்வுகள் வழங்கப்படவில்லை.

மாறாக ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் சிற்சில ஜனநாயக இடைவெளிகளை ஏற்படுத்திவிட்டு, அவற்றை தமிழ் மக்களுக்கான அசியல் தீர்வுகள் போல காட்டிக்கொள்ள எத்தனிக்கின்றது. இந்த இடத்தில் நாம் இனமாகத் திரட்சி பெற வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.














# தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடமே கையளித்து தெற்கு மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்துமா?

## தேசிய மக்கள் சக்தியிடம் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கேள்வி

வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் காணிகளை சட்டவிரோதமாக கபளீகரம் செய்து வைத்திருக்கும் இலங்கை அரசாங்கம், அந்த காணிகளை மக்களிடம் கையளிப்பதை ஏதோ அந்த மக்களுக்கு இனாமாகக் கொடுப்பது போன்று விளம்பரப்படுத்துகின்றது. சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதாகக் கூறும் இன்றைய அரசாங்கம் அதனை செயல் முறையில் காட்ட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு இடித்துரைத்துள்ளார்.

இது தொடர்பில் தாம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய வடக்கு – கிழக்கு, பிரதேசங்களில் விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் தொலைதூரங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள். இதனால் தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகள் சிங்கள மக்களுக்குப் போய்ச்சேர்ந்தன. இதற்கு அடிப்படைக் காரணமாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அவர்களை சிறுபான்மையினராக்குவதே தென்னிலங்கை ஆளும் வர்க்கத்தின் நோக்கமாக இருந்தது. இவற்றிற்கெதிரான பல்வேறுபட்ட போராட்டங்களை தமிழ் மக்கள் நடத்தினாலும்கூட ஒவ்வொரு அரசாங்கமும் பலாத்கார சிங்களக் குடியேற்றங்களை ஒரு கொள்கையாகவே கொண்டிருந்தது.

வெறுமனே காணிகளைப் பிடிப்பது மாத்திரமல்லாமல், மொழிவாரியாக, கல்வி வாரியாக பல்வேறுபட்ட வழிமுறைகளிலும் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதெற்கெதிரான போராட்டங்களும் தொடர்ந்துகொண்டே இருந்தன. இந்தப் போராட்டங்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிட்டபோது அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். இதன் காரணமாகவே பல்வேறுபட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றமையுடன் மிக நீண்டகால ஆயுதப்போராட்டத்திற்கும் அது வழிவகுத்தது. இந்தப் போராட்ட காலகட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகள் முப்படையினராலும் பொலிஸாரினாலும் பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டன. இராணுவத்தினர் இவற்றைக் கைப்பற்றுவதற்கான எவ்வித சட்ட உரித்தோ அல்லது தார்மீக நெறிமுறைகளோ இல்லாவிட்டாலும் கூட, அக்காணிக்கு உரித்தான மக்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு அவர்களின் காணிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. இப்பொழுது யுத்தம் முடிவடைந்து பதினாறு வருடம் முடிவடைந்த நிலையிலும் இன்னும் அந்தக் காணிகளுக்கு உரித்தான மக்களிடம் அதனைக் கையளிக்காமல் படையினரே தம்வசம் வைத்துள்ளனர்.

சட்டவிரோதமாகக் கைப்பற்றப்பட்ட காணிகளை யுத்தம் முடிந்து பதினாறு வருடங்கள் கழிந்த பின்னரும் படையினர் தம்வசம் வைத்திருப்பதுடன் அவற்றிற்கு உரிமை கோரவும் முற்படுகின்றனர். எதிர்த்தரப்பிலிருந்து அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும் என்று கூறும் சகல கட்சிகளும் ஆட்சிக்கு வந்தவுடன் அதனை மறந்துவிடும் சூழ்நிலைதான் நிலவுகின்றது. இன்றிருக்கக்கூடிய முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியும் கூட ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியும் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. ஊழலுக்கு எதிராக, இலஞ்ச லாவண்யங்களுக்கு எதிராகக் கைதுகள், வழக்குகள் என்று செயற்படும் அரசு, சட்டவிரோதமாகக் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பதில் மாத்திரம் பின்னடித்துக் கொண்டே இருக்கின்றது.

மக்களின் காணிகளை வைத்திருப்பதற்கான எவ்வித சட்டபூர்வமான அருகதையும் காணிகளைக் கபளீகரம் செய்து வைத்திருப்பவர்களுக்கு இல்லை. ஆகவே, இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்போம் என்று கூறுகின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த காணிகள் தொடர்பான திட்டவட்டமான முடிவினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அல்லாவிடின் இவர்களும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணைபோகிறவர்கள்தான் என்பதுதான் தமிழ் மக்களின் பார்வையாக இருக்கும்.

கொழும்பிலோ, காலியிலோ, ஹம்பாந்தோட்டவிலோ சிங்கள மக்களுக்குச் சொந்தமான காணிகளை ஆளும் தரப்பினரால் இவ்வாறு பலாத்காரமாகப் பிடித்து வைத்திருக்க முடியுமா? அவற்றில் பாரிய கட்டுமானங்களை உங்களால் மேற்கொள்ள முடியுமா? அதனை படையினர் விவசாயம் செய்யும் நிலமாக உங்களால் மாற்ற முடியுமா? இதற்கு சிங்கள மக்கள் இடம்கொடுப்பார்களா? ஆனால் இவை அனைத்தையும் தமிழ்ப் பிரதேசங்களில் நீங்கள் செய்கிறீர்கள். தமிழ் மக்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டை தேசிய மக்கள் சக்தியும் எடுக்கின்றதா? – என்ற கேள்வி மக்கள் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நாங்கள் இனவாதிகள் அல்லர், மதவாதிகள் அல்லர், தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளையும் வழங்குவோம் என அடிக்கடி முழக்கமிடுகிறீர்களே, ஆனால் அதில் ஏதேனும் ஒன்றாவது நடைமுறையிலுள்ளதா?

உங்களது முப்படையினரில் மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட பெரும்பகுதி வடக்கு – கிழக்கிலேயே நிலைகொண்டுள்ளது. இவர்களது முகாம்களுக்காகவும் பயிற்சிக்காகவும் படையணிகளின் விளையாட்டிற்காகவும் அவர்களது விவசாயத்திற்காகவும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகளை நீங்கள் பிடித்து வைத்திருக்கிறீர்கள். யுத்தம் முடிந்து பதினாறு வருடங்கள் கழிந்த நிலையில் இங்கு எவ்வித துப்பாக்கிக் கலாசாரமும் இல்லை. ஆனால் தென்பகுதியில் நாளாந்தம் துப்பாக்கிச் சூடும், கொலைகளும் நடைபெறுகின்றன. எனவே தென்பகுதி சிங்கள மக்களுக்கே பாதுகாப்பு தேவைப்படுகிறது. எனவே வடக்கு – கிழக்கில் மேலதிகமாக உள்ள படையினரை தென்பகுதியிலுள்ள சிங்கள மக்களின் பாதுகாப்பிற்கு அனுப்புவதினூடாக தமிழ் மக்களுக்கான காணிகளை அவர்களிடமே கையளிக்க முடியும் என்பதுடன் தென்பகுதி மக்களும் அச்சமின்றி வாழ்வார்கள். – என்று உள்ளது.









# நுவரெலியா இரண்டு நாள்களாக குழாயில் சேற்றுநீர் விநியோகம்

(ஆர்.எப்.எம்.சுஹைல்)

நீண்ட வார இறுதி விடுமுறையை கழிப்பதற்காக நுவரெலியாவிற்கு அநேக சுற்றுலாப் பயணிகள் வந்துள்ள நிலையில் நுவரெலியா மாநகர எல்லைக்குள் நேற்று முன்தினம் காலை முதல் சேற்று நீரே விநியோகம் செய்யப்படுகின்றது.

அதே நேரம் நேற்று முன்தினத்தை விட நேற்று நீர் வரத்து இருந்தாலும், குடிப்பதற்கான தர நிலையில் நீர் இல்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் நுவரெலியா வாழ் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள், ஹோட்டல் தொழில் செய்யும் வியாபாரிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமத்திற்கு ஆளானார்கள்.

இந்த நிலைமை குறித்து நுவரெலியா மாநகர சபையின் கீழ் இயங்கும் நீர் வழங்கும் குழுவின் தலைவர் மாநகர சபை உறுப்பினர் மகேஸ் ரத்னசேகரவிடம் வினவிய போது நேற்று முன்தினம் பிரதான நீர்க் குழாய் ஒன்றில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்வாறு நீர் அசுத்தமாக விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இருப்பினும் இந்த நிலைமையை வெகு விரைவில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.






# நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு மட்டக்களப்பிலிருந்து இடமாற்றம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்புமாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் நுவன் மெண்டிஸ் மற்றும் இரு உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் உட்பட 4 பேர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸ் ஆணைக்குழுவின் இடமாற்ற அனுமதியைஅடுத்து கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றப்பட்ட நுவன் மெண்டிஸ் மீண்டும் கொழும்புக்கு நேற்று முன்தினம் இடம் மாற்றப்பட்டுள்ளார்.

அதேவேளை வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த பிரியந்த மற்றும் களுவாஞ்சிக்குடி உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த பண்டார ஆகியோரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை ஆயித்தியமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் தென்னிலங்கை பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



# தே.மு.தி.க.–த.வெ.க. கூட்டணி தொடர்பில் ஜனவரியில் பொதுச் செயலாளர் அறிவிப்பார்

## விஜயபிரபாகரன் தெரிவிப்பு



விஜய் கட்சியுடன் தேர்தலில் தே.மு.தி.க .கூட்டணி சேர வாய்ப்புள்ளதா என்பது பற்றி ஜனவரியில் பொதுச் செயலாளர் அறிவிப்பார் என அக்கட்சியின் இளைஞரணி மாநிலச் செயலாளர் விஜயபிரபாகரன் மதுரையில் தெரிவித்தார்.

மதுரை எல்லீஸ் நகர் பகுதியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் தே.மு.தி.க. பழங்காநத்தம் பகுதிச் செயலாளர் லட்சுமணன் இல்ல விழாவில் விஜயபிரபாகரன் பங்கேற்றார்.

இதன்பின், அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகம் முழுவதும் ‘இல்லம் தேடி, உள்ளம் நாடி’ என்ற இரண்டாம் கட்ட சுற்றுப்பயணம் செய்கிறோம். தே.மு.தி.க. எந்தக் கட்சி கூட்டணிக்கு செல்கிறதோ அக்கட்சிக்கு தான் வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கும். தற்போது, தே.மு.தி.க. மக்களுடன் கூட்டணியில் இருக்கிறோம்.

விஜய் கட்சியுடன் தேர்தல் கூட்டணி சேர வாய்ப்புள்ளதா என்பதை வரும் ஜனவரி 9 ஆம் திகதி பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் நடக்கும் மாநாட்டில் பொதுச் செயலாளரே அறிவிப்பார். விஜயகாந்துக்கும், விஜய்க்கும் ஒரு நல்ல நட்பு உள்ளது.

நாம் தமிழர் கட்சி சீமான் அன்றைய தினம் கேப்டன் ட்ரெண்டிங்கில் இருந்த போது, கேப்டனை திட்டியதால் வாக்கு வாங்கினார். அரசியலில் நிரந்தர நண்பனும் , எதிரியும் இல்லை. விஜயகாந்த் ரசிகர்கள், தொண்டர்கள் அவ்வளவு முட்டாள்கள் அல்ல.அண்ணன் விஜய்யை எங்களுக்கும் பிடிக்கும். அவரது திரைப்பட நிகழ்ச்சிகள் பலவற்றிற்கு நான் சென்றிருக்கிறேன்.

மதுரை எனக்கு புதுசு அல்ல. கேப்டன் கரம் பிடித்து வீதி வீதியாக வலம் வந்துள்ளேன். மதுரையின் சிறப்பு என்றால் சப்பாடு தான். இங்குள்ள சிறப்பான உணவுகளை எனக்கு என் அப்பா வாங்கிக் கொடுத்துள்ளார். பல எதிர்ப்புகளை மீறி தேமுதிக கட்சி வந்துள்ளது அதற்கு கேப்டன் விஜயகாந்த் தான் காரணம். எனது அப்பாவை நான் மிஸ் பண்ணுவது போல தமிழகத்தில் ஒவ்வொருவரும் மிஸ் பண்ணுகின்றனர்.

கேப்டன் மக்களுக்கு நல்லது செய்யவே அரசியலுக்கு வந்தார். உங்கள் ஆசையை பூர்த்தி செய்ய லேடி கேப்டன் வந்துள்ளார். அவர் தான் எனது அம்மா. பிரேமலதா விஜயகாந்த் அடுத்த ஜெயலலிதாவா என கேட்கின்றனர். எங்கள் அப்பா தமிழ், தமிழ் என, வாழ்ந்தார். யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம் யாரும் கூட்டம் கூட்டலாம். ஆனால் மக்கள் தெளிவானவர்கள். யாருக்கு வாக்கு போடவேண்டும் என்று மக்களுக்கு தெரியும். எனது அப்பா லட்சியம் ஜெயிக்கவே என் குடும்பம் எல்லாத்தையும் விட்டுவிட்டு உங்கள் முன் நிற்கிறேன். எனது அப்பா, தாத்தா கட்சியில் இல்லை. சுயமாக சம்பாதித்து உழைத்து கட்சியை வளர்த்துள்ளோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க.–அ.தி.மு.க. கூட்டணியால் வாக்குத் திருட்டு நடைபெறும் நிலை

## ப.சிதம்பரம் கூறுகின்றார்

தமிழகத்தில் பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்துள்ளதால் வாக்குத் திருட்டு நடைபெறும் சூழல் உருவாகியிருப்பதாக முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

வாக்குத்திருட்டை தடுப்போம், ஜனநாயகத்தை பாதுகாப்போம் என்ற தலைப்பில் திருநெல்வேலியில் காங்கிரஸ் கட்சி சார்பில் அரசியல் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தலைமை வகித்தார்.

இந்த மாநாட்டில் ப. சிதம்பரம் கருத்து தெரிவிக்கையில்,

“வாக்குத் திருட்டு குறித்து ராகுல் காந்தி அம்பலப்படுத்தியும் தேர்தல் ஆணையம் அதை விசாரிக்க மறுக்கிறது. போலியான வாக்காளர்களை சேர்ப்பது, உண்மையான வாக்காளர்களின் பெயர்களை நீக்குவது, ஒரு முகவரியில் 120 பேரை சேர்ப்பது,



அவர்கள் பெயரில் பாஜகவினர் வாக்களித்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

இதெல்லாம் தில்லுமுல்லு என்று பல புள்ளியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். வாக்குத்திருட்டு பிஹாரில், கர்நாடகத்தில், மகாராஷ்டிராவில் நடைபெற்றுள்ளது.

அதுபோல் தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டுக்கான சதி நடைபெறலாம். அதை செயல்படுத்த பா.ஜ.க .உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில்,கேரளத்தில் அதை நடக்க விடமாட்டோம். தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான அணி வலிமையான அணி. ஆனால் அ.தி.மு.க. அணியை குறைத்து மதிப்பிடமாட்டேன். இந்த 2 அணிகள் இருந்தால் வாக்குத் திருட்டு நடைபெறாது. தமிழகத்தில் தி.மு.க. அணி, அ.தி.மு.க. அணி என்று மட்டும் இருந்தால் வாக்குத் திருட்டு நடைபெறாது. ஆனால் பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. சென்றிருப்பதால் சந்தேகம் வருகிறது. பா.ஜ.கவுடன் அ.தி.மு.க கூட்டணி அமைத்துள்ளதால் வாக்குத் திருட்டு நடைபெறும் சூழல் உருவாகியுள்ளது. எனவே விழிப்போடு இருங்கள்.” என்று தெரிவித்துள்ளார்.

# ரஜினியுடன் சேர்ந்து நடிப்பதை உறுதி செய்தார் கமல்ஹாசன்!

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த் – கமல்ஹாசன் இணைந்து நடிப்பது உறுதியாகியுள்ளது. இதனை கமல்ஹாசன் உறுதி செய்துள்ளார்.

‘கூலி’ படத்துக்குப் பிறகு ‘கைதி 2’ படத்தினை இயக்கவுள்ளதாக லோகேஷ் கனகராஜ் பல பேட்டிகளில் கூறியிருந்தார். ஆனால், அப்படத்துக்கு முன்னதாக ரஜினி – கமல் இணைந்து நடிக்கும் படத்தினை இயக்க முடிவு செய்திருக்கிறார் லோகேஷ் கனகராஜ். இதனை ரெட் ஜெயண்ட் நிறுவனம் மற்றும் ராஜ்கமல் நிறுவனம் இணைந்து தயாரிக்கவுள்ளன.

இதனை கமல்ஹாசன் சைமா விருது விழாவில் உறுதி செய்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

“தரமான சம்பவம் என்பதில்தான் ஆபத்தே இருக்கிறது. தரம் எப்படி இருக்கிறது என்பதை ஓடியன்ஸ்தான் சொல்லவேண்டும். நாங்கள் இருவரும் இணைந்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. நாங்கள் விரும்பி பிரிந்திருந்தோம். காரணம் ஒரு பிஸ்கட்டை பிரித்து ஆளுக்குப் பாதியாக கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆளுக்கு ஒரு பிஸ்கட் வேண்டும் என்று விரும்பினோம். அதை வாங்கி நன்றாக சாப்பிட்டோம். இப்போது மறுபடியும் அரை பிஸ்கட் போதும் என்னும்



சந்தோசம் எங்களுக்கு உள்ளது.

எனவே நாங்கள் ஒன்றாக இணைய உள்ளோம். எங்களுக்கு இடையிலான போட்டி நீங்கள் ஏற்படுத்தியதுதான். எங்களுக்கு அது போட்டியே கிடையாது. எங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததே பெரிய விஷயம். அப்போதே நாங்கள் முடிவு செய்துவிட்டோம் இப்படித்தான் நாங்கள் இருக்க வேண்டும் என்று. அப்படித்தான் அவரும் இருக்கிறார் நானும் இருக்கிறேன்.

வியாபார ரீதியாகத்தான் இப்போது இணைகிறோமே தவிர எங்களுக்கு இது எப்போதோ நடக்க வேண்டியது, இப்போதாவது நடக்கிறதே, நடக்கட்டும் என்பது போலத்தான் எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் ஒருவர் படத்தை ஒருவர் தயாரிக்க எப்போதும் விரும்பியிருக்கிறோம். ஆனால் இப்போது வேண்டாம் அப்போது வேண்டாம் என்று நாங்களே எங்களை தடுத்துக் கொண்டிருந்தோம்..” என்றார்.



# உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலில் 3 பாரிய உட்கட்டமைப்பு வசதிகள் பாதிப்பு

உக்ரைன் தலைநகர் கீவ் மீது குறி வைத்து, ரஷ்யா இரவு நேரத்தில் நடத்திய புதிய ஆளில்லா வானூர்தி தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலியானவர்களில் ஒரு வயதான குழந்தையும், பெண் ஒருவரும் இடிபாடுகளுக்கு இடையே இருந்து உடலமாக மீட்கப்பட்டனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியின் சொந்த ஊரான, கிரிவி ரிஹ் மீதும் ரஷ்யா தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களின் போது பாரிய 3 உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களுக்கும் வான் தாக்குதல் எச்சரிக்கைகள் இரவு முழுவதும் செயல்படுத்தப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனுக்கு எந்தவகையிலும் உதவ வேண்டாம் என மேற்கு நாடுகளுக்கு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் எச்சரிக்கையினை கடுமையாக்கி வரும் நிலையில் புதிய தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஒரே இரவில் பல மாடிக் குடியிருப்பு கட்டடங்கள் பகுதியளவில் அழிக்கப்பட்டதுடன், தாக்குதல்களுக்குப் பின்னர் தீப்பிடித்ததாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்த பெப்ரவரி 2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு தாக்குதலை ஆரம்பித்ததன் பின்னர், தற்போது உக்ரைனிய பிரதேசத்தின் சுமார் 20 சதவீத நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

இது தவிர, கடந்த 2014 ஆம் ஆண்டு ரஷ்யாவினால் சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட தெற்கு கிரிமியா தீபகற்பமும் உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.





# தென் கொரியாவுக்கு செல்கின்றார் ட்ரம்ப்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், அவரின் உயர் ஆலோசகர்களும், எதிர் வரும் ஒக்டோபரில் தென் கொரியாவுக்கு ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு வர்த்தக அமைச்சர்களின் கூட்டத்திற்காக பயணம் செய்யவுள்ளனர்.

ஒக்டோபர் மாத இறுதிக்கும் நவம்பர் மாதத் தொடக்கத்திற்கும் இடையில், தென் கொரியாவில் இந்த உச்சிமாநாடு நடைபெறவுள்ளது.



இந்த நிலையில், சீன ஜனாதிபதியும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதால், இருவரும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இருப்பினும் சந்திப்புக்கான திகதிகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

# இன்றைய ராசி பலன்கள் - 08.09.2025




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் பணியின் தரத்தில் உங்கள் திறமை பிரதிபலிக்கும். நீங்கள் பணியை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வீர்கள். அவரும் பதிலுக்கு உங்களுடன் அன்பாய் நடந்து கொள்வார்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். சேமிப்பதற்கும் சாதகமான வாய்ப்புகள் காணப்படும்.

இன்று உங்களிடம் மன உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் இலட்சியங்கள் பூர்த்தி யடைந்து மகிழ்ச்சி கிடைக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். உங்கள் அணுகுமுறையில் தன்னம்பிக்கையும் நகைச்சுவை உணர்வும் வெளிப்படும்.

பணியில் திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும் சிறந்த வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். உறவில் பரஸ்பர அன்பு காணப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பண வரவுக்கான அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நேர்மறையான உங்கள் மனநிலை உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று பொறுமையாக இருக்க வேண்டும். அனைத்து விஷயங்களிலும் சகஜமாக இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெற முடியும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகளைக் குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உங்கள துணையுடனான உறவின் மகிழ்ச்சி பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். கூடுதல் பொறுப்பு காரணமாக வங்கியிருப்பை சிறப்பாக பராமரிக்க இயலாது.

கணுக்கால்களில் வலி காணப்படலாம்.தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் குணம் பெறலாம்.




ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதற்கு உகந்த சூழ்நிலை காணப்படும். அதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள். உங்களுக்கு சாதகமாக நிகழ்வுகள் அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரண-மாக பணியில் தவறு செய்வீர்கள். உங்கள் மேலதிகாரிங்களின் நன்மதிப்பை பெற நீங்கள் கவனமாக பணியாற்ற வேண்டும்.

உங்கள துணையிடம் சகஜமாகப் பேசுவீர்கள். இதனால் உங்கள் கருத்துக்களை வெளிபடையாக கூற இயலும். இதனால் நல்லுறவு உருவாகும்.

பொருளாதார பாதுகாப்பிற்காக நீங்கள் போதிய அளவு பணம் சேமிக்க வேண்டும். பண வரவு குறிப்பிடும் வகையில் காணப்படாது.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் சுமூகமாகச் செயல்பட வேண்டும். வாழ்க்கையின் சரியான மற்றும் தவறான விஷயங்களை பிரித்தறிய வேண்டும்.

உங்களின் கடின உழைப்புக்கு உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். இதனால் உங்களிடம் போதிய பணம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெற கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். உங்கள் ஆற்றலை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள்.




இன்று குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனால் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள். பக்திப் பாடல்கள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சந்திப்பீர்கள். பணியில் உயர்வு காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் அம்சத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

அஜீரணக் கோளாறு மற்றும் கால் வலி காணப்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சரிவிகித உணவை உட்கொள்ள வேண்டும்.




இன்று வெற்றி பெறுவதற்கு தைரியமும் உறுதியும் தேவை. உங்கள் இலக்குகளை அடைய இவற்றை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியில் நற்பலன் காண கவனமாக பணியாற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறு செய்ய நேரலாம். உங்கள் பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இன்று கூடுதல் செலவு காணப்படும். இது தேவையற்ற செலவாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.09.2025




இன்று உங்கள் முயற்சி மூலம் நன்மையான விஷயங்களைப் பெறுவீர்கள். சிறந்த அதிர்ஷ்டத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நல்ல பெயரெடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் இனிமையாக ஆக்கலாம். இந்த மகிழ்ச்சியின் காரணமாக உங்கள் இருவரிடையே நெருங்கிய பிணைப்பு ஏற்படும்.

இன்று கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு நிலை உயரும் வாய்ப்பு உள்ளது.




இன்று எழும் வேறுபாட்டை தீர்க்க பக்குவமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். மாறுபடும் சூழ்நிலைகேற்ப இன்று நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் நீங்கள் சிறிது போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும். பணிகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை விழிப்புடன் கையாள வேண்டும்.

கண் எரிச்சல் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். அஜீரணக் கோளாறு காணப்படும்.




இன்று சில விஷயங்களை நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் மனக்குழப்பம் ஏற்படும்.

அதிக வேலைகள் உங்களுக்கு கவலையை உண்டாக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்துகொள்ள வேண்டும். நல்ல புரிந்துணர்விற்கு இது மிகவும் அவசியம்.

பண வரவு குறைந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நேர்மறையான எண்ணங்கள் காரணமாக உங்கள் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த மன நிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முக்கிய நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும். இன்று உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை நேரத்தோடு முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் துணையுடன் சிறிது வன்மையாக உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

# எல்ல - இராவணா எல்ல இடையே ஆபத்தான 10 இடங்கள் அடையாளம்

## பதுளை மாவட்ட வீதி அதிகார சபை அறிவிப்பு




எல்ல – வெல்லவாய வீதியின் எல்ல மற்றும் இராவணா எல்ல இடையில் ஆபத்தான 10 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த இடங்கள் தொடர்பில் விசேட ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என துளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் எஸ்.எஸ். ஹேன்னாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த வீதிகளின் இருபுறங்களையும் அவதானத்துடன் மீள கட்டமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் 26 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதி மீள்கட்டமைக்கப்படவுள்ளது.

பதுளை மாவட்டத்தில் விபத்துகளை தவிர்ப்பதற்காக 700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது